மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உணவு கலப்படச் சட்டம் அகில இந்திய அளவிலே பாராளுமன்றத்திலே உருவானது. அதிலே தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு மத்திய அரசுதான் ஒத்துழைக்க வேண்டும். பெரும்பாலும் சில்லரை வியாபாரிகள்தான் தண்டிக்கப்படு கிறுர்கள் என்ற குறை இருக்கிறது. சில்லறையாக வாங்கி விற்கிறவர்கள் கவனம் செலுத்தி கலப்படம் இல்லாத பொருட்களை வாங்கி பொது மக்களுக்கு வழங்க வேண்டுமென்று அரசு மிகவும் வற்புறுத்தி வருகிறது.

திரு. எஸ். வடிவேல் : அரிசியில் கல் கலக்கிருர்களே, அதுவும் உணவு கலப்படச் சட்டத்திலேதானே வரும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தச் சட்டத்திற்குள்தான் வரும். ஆனுல், வேண்டுமென்றே கலந்தார்களா என்பது விவாதத்திற்குரிய தாகும்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : பெரும்பாலும் பால் கேஸ் கள்தான் இதிலே வருகின்றன என்று சொல்லப்படுகிறது. மற்ற கேஸ்கள் எல்லாம் விடப்படுகின்றன. எனவே இதிலே பாலுக்காகப் போடப்பட்ட கேஸ்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், அரிசியிலே கலப்படம் செய்யக் கூடிய வகையில் கல்லை அரிசி போன்று தயாரிக்கிற தொழிற்சாலை இருந்ததாகவும் அதைப் பற்றிச் செய்தியெல்லாம் வந்ததே, அதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்விக்குரிய செஞ்சி, திண்டிவனம் வட்டத்திலே அப்படி இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், மத்திய அரசாங்கத்தினுடைய கலப்பட சட்டத்திலே பல கிளாஸ்கள் நம்முடைய மாநிலத்திலே அமல் படுத்தப்பட கஷ்டம் இருக்கிறது. எனவே அதை மாற்றியமைக்க வேண்டு மென்று நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி சில ஆலோசனைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் எந்த அளவுக்கு மத்திய அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளும் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

Gratuity to Industrial Workers

*707 *Q.*—THIRU N. K. PALANISWAMY *:* Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce uniform gratuity schemes for the Industrial Workers of the State ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) மைய அரசு 10-12-1971 அன்று மக்கள் சபையில் 1971-ஆம் ஆண்டின் பணிக் கொடை வழங்கல் சட்ட முன்வடிவு கொண்டுவந்து இந்தச் சட்ட முன் வடிவு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. பணிக்கொடை ஆண்டு ஒன்றுக்கு 15 நாள் ஊதியம் என்பதற்கு மாறாக, ஒரு மாத ஊதியம் வழங்க வழி செய்யும் வகையில் சட்ட முன்வடிவைத் திருத்த மைய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்த கிராஜுவிட்டியைப் பொறுத்த வரையில் நாம் முன்னாலேயே சட்டத்தைக் கொண்டுவரலாமே, ஒரு மாத போனஸ் என்று தமிழக அரசே கொண்டுவந்து ஒரு சட்டத்தைப் போட்டு அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியாக இருக்கக் கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் சட்டத்தைக் கொண்டுவருவார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அந்தக் கருத்தைத்தான் டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டிலே வற்புறுத்தினேன். ஆனால், மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் இந்தியா முழுவதற்கும் ஒரு சீராக சட்டம் இருப்பது நல்லது என்பதால் அப்படிக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். இப்பொழுது நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது எந்த வகை யிலே நிறைவேற இருக்கிறது என்று பொறுத்திருந்து பார்த்து, நாம் நம்முடைய பரிந்துரையைச் செய்யலாம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தச் சட்டத்தை இந்த 1972 ஆம் ஆண்டிலாவது கொண்டுவருவதற்கு ஏற்பாடு உண்டா ? இந்த வருஷமே இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, எவ்வளவு விரைவில் கொண்டுவர வேண்டுமோ அந்த அளவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

House-sites for Harijans in Erode taluk

*** 708.** *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the reasons for the delay in providing house-sites for the Harijans in Ganapathi-palayam, Samiarpalayam, Kammalakuttai, Vamalaigounden-palayam, Vaduhanpalayam and Thalaraipalayam in Uttukuli firka of Erode taluk ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கவுண்டன்பாளைய கிராமத் தின் குக்கிராமமாகிய வாமலைக்கவுண்டன்பாளையத்தைப் பொறுத்த மட்டில் 4 (1) பிரிவின்கீழ் முன்மொழிவு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. பிரிவு 6-ன் கீழ் செயற்குறிப்பு கோயம்புத்தூர் மாவட்ட